தினமணி

## சாத்தனூர் அணை இன்று திறப்பு: ஜெயலலிதா

First Published : 30 Jan 2012 05:22:10 AM IST



சென்னை, ஜன.29: பாசனத்துக்காக சாத்தனூர் அணை ஜனவரி 30-ம் தேதி திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்தி:
திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் நீர்த்தேக்கத்தில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். இந்தக் கோரிக்கையை ஏற்று ஜனவரி 30-ம் தேதி முதல் தண்ணீர் திறந்து விடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
இதனால் திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள 50 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

---

## மீனவர் பாதுகாப்புக்கு தனிப்படை: வீரமணி

First Published : 30 Jan 2012 05:20:40 AM IST



சென்னை, ஜன.29: மீனவர் பாதுகாப்புக்கு தனிப்படை அமைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கை: தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் மீன்பிடி தொழிலில்தான் உள்ளது. அவர்களுக்கு இலங்கை அரசு நாள்தோறும் தொல்லை கொடுத்து வருகிறது. இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சரும், அதிகாரிகளும், இலங்கை அதிபர் ராஜபக்ஷ மற்றும் அதிகாரிகளை சந்தித்துப் பேசியும் தமிழக மீனவர்களுக்கு வரும் தொல்லை தொடர்கதையாக உள்ளது.

எனவே, கடலோர காவல் படையில் "மீனவர் பாதுகாப்புப் படை' என்ற தனிப் பிரிவை அமைத்து 24 மணிநேர ரோந்து மூலம் கண்காணிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சி கூட்டம் நடத்தி அதில் தீர்மானம் நிறைவேற்றி முடிவு எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

---

## தலையங்கம்: ஏரி காக்க வேணும்!

First Published : 30 Jan 2012 01:27:55 AM IST

Last Updated : 30 Jan 2012 01:37:27 AM IST

சென்னையை அடுத்த கும்மிடிப்பூண்டியில் ஒரு புதிய நீர்த்தேக்கத்தை உருவாக்க ரூ.330 கோடியை அனுமதித்திருக்கிறார் தமிழக முதல்வர் ஜெயலலிதா. சுமார் 1250 ஏக்கரில் இரண்டு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்படவுள்ள இந்த நீர்த்தேக்கம், சென்னை நகரின் குடிநீர்ப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கான நடவடிக்கை.

ஒரு டிஎம்சி கொள்ளளவுத்திறன் கொண்ட இந்த நீர்த்தேக்கத்திற்காக அமைக்கப்படவுள்ள சுமார் 6.8 கிலோ மீட்டர் தொலைவு நீள மண்கரை, தமிழகத்தின் ஏரிக்கரைகளில் மிக நீண்டதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இந்த நீர்த்தேக்கம் மிக அவசியமானதும் காலத்தின் கட்டாயமும் ஆகும்.

சென்னையில் கடந்த சில மாதங்களில் பெய்த பலத்த மழையும், இதனால் சென்னை நகரம் பட்ட அவதியும் எல்லாரும் அறிந்தவை. கூவத்தையும் அடையாறையும் என்னதான் குப்பைகளைப் போட்டு அடைத்தாலும், எவ்வளவுதான் சாக்கடையைக் கொண்டுபோய்த் தள்ளினாலும், அவை தங்களை மக்களுக்கு உதவும் நதிகள் என்பதை எப்போதும் நிரூபித்துக்கொண்டே இருக்கின்றன.

அண்மையில் பெய்த பலத்த மழைவெள்ளத்தை இந்த இரு நதிகளும் கடலில் கொண்டு சேர்த்தன. அதையும் மீறி, சேரிடம் இல்லாமல் சேறான மழைவெள்ளம் சென்னை புறநகரை பெரிதும் பாதித்தது. இப்போது உருவாக்கப்படும் புதிய ஏரி, மழைவெள்ளத்தையும் ஏற்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்த புதிய நீர்த்தேக்கம் சென்னையின் குடிநீர் வசதிக்காக மட்டுமே ஏற்பட்டுள்ளது. சென்னை பெருநகரின் குடிநீருக்கு முக்கியத்துவம் அளித்துள்ள தமிழக முதல்வரின் நடவடிக்கை சரியானது என்றாலும், அவர் தமிழகத்தில் உள்ள பாசன ஏரிகளுக்கும் இதே முன்னுரிமையை அளிக்க வேண்டும்.

குடிநீர் ஆதாரத்தைப் பெருக்கும் வகையில், தமிழ்நாட்டின் பல்வேறு ஏரிகளில் நிலத்தடி நீர் செறிவூட்டுத் திட்டம் வகுத்து இதற்காக மொத்தம் ரூ.11.49 கோடி ஒதுக்கப்பட்டிருந்தாலும், இவையும் குடிநீரை மனதில் கொண்டு உருவாக்கப்பட்ட திட்டமேயொழிய, பாசன மேம்பாட்டுக்கான திட்டம் அல்ல.

தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், மிகவும் மாசுபட்ட 62 ஏரிகளை மத்திய அரசு பட்டியலிட்டு, அவற்றின் மேம்பாட்டுக்கு மாநில, மத்திய அரசு இணைந்து நிதிப் பங்கீட்டுத் திட்டத்தில் புனரமைக்க திட்டங்கள் தீட்டியது. இந்த ஏரிகள் அனைத்தும் சுற்றுலாப் பயணிகளை மனதில் கொண்டு முன்னுரிமை அளிக்கப்பட்டவை. இந்தப் பட்டியலில் தமிழ்நாட்டின் உதகை ஏரியும், கொடைக்கானல் ஏரியும் உள்ளன.

குடிநீருக்கும், சுற்றுலா மேம்பாட்டுக்கும் மட்டுமே ஏரிகளை மேம்படுத்துவதுபோல, பாசனத்துக்காகவும் ஏரிகளை மேம்படுத்த வேண்டிய கட்டாயம் தமிழகத்துக்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பரவலாக 33,000 ஏரிகள் உள்ளன. இவற்றில் குறிப்பிடத் தகுந்த சுமார் 5,200 ஏரிகள் தமிழக அரசின் பொதுப் பணித்துறையின் வசம் உள்ளன. இவற்றின் மூலம் தமிழ்நாட்டில் சுமார் 5 லட்சம் ஹெக்டேர் விளைநிலங்கள் பயனடைகின்றன.

நதிகள் மற்றும் சிற்றோடைகள் மூலம் ஏரிக்கு வரும் நீர்ப்பாதைகள் அனைத்தும் தூர்ந்துபோயும், சில இடங்களில் ஆக்கிரமிப்புகளால் மறைந்து போயுமுள்ளன.

ஆக்கிரமிப்புகளைத் தயவுதாட்சண்யமின்றி அகற்றும் அதிரடி நடவடிக்கை என்பது தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு மட்டுமே சாத்தியம். நீர் வரும் பாதைகளைத் தூர்வாரினால் மேற்சொன்ன 5,200 ஏரிகளில் பெரும்பாலானவை எப்போதும் நீர் நிரம்பியதாய் மாறிவிடும்.

ஏரிகள் தூர்ந்துபோக மிக முக்கியமான காரணம், இதனை உள்ளாட்சி அமைப்புகள் குப்பை கொட்டும் இடமாக மாற்றியதுதான் என்றால் மிகையில்லை. ஆறுகள் இல்லாத நகரங்களில் ஏரிகள் வெறும் சாக்கடை தேக்கப்படும் இடமாக மாறியுள்ளன. சுத்திகரிக்கப்பட்ட சாக்கடை நீரை மட்டுமே ஏரிகளில் கலக்க முடியும் என்ற நிலையை தமிழக அரசு உருவாக்க வேண்டும்.

ஏரிகளில் ஊர்ச் சாக்கடை கலந்தாலும்கூட, ஏரி வற்றும்போது வண்டல் மண்ணை அள்ளிப்போய் தங்கள் நிலத்தில் போட்டு அதைச் செறிவூட்டவும், ஏரிக் களிமண்ணை எடுத்துப்போய் வீடுகட்டுதல் மற்றும் குயவுத் தொழிலுக்குப் பயன்படுத்தியதன்

மூலமும் இயல்பாகவே ஏரித் தூர்வாரும் பணிகள் எந்த அரசின் ஆதரவும் இல்லாமல் சமூக சுழற்சியால் நடைபெற்றுக் கொண்டிருந்தன. விவசாயிகள் ரசாயன வேளாண்முறைக்கு மாறியதால், ஏரி வண்டல் மண், வீடுகளின் திறந்தவெளிக் கழிவறைக் குப்பைகளை நிலத்தில் போடும் வழக்கும் மறைந்தே போனது. பிளாஸ்டிக் பயன்பாடு அதிகரித்ததால், மண்பானைகள் மறைந்தன. குயவர்கள் ஏரிகளில் களிமண் அள்ளுவது குறைந்துபோனது. ஏரிகள் குப்பை கொட்டும் இடமாக மட்டுமே மாறிவிட்டன.

ஏரிப் புறம்போக்கு என்று கருதப்பட்ட இடங்களில் எல்லாம் இப்போது குடியிருப்புகள் உருவாகி விட்டிருக்கின்றன. விவசாயத்துக்கு ஏரிப் புறம்போக்குகள் பயன்படுத்தப்பட்டால் மீட்டெடுக்கலாம். குடியிருப்புகளை இடிக்கவா முடியும்? ஆக்கிரமிப்புகள் தயவுதாட்சண்யமே இல்லாமல் இடிக்கப்படும் என்கிற பயம் இருந்தால் மட்டுமே இந்தப் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

நகரின் விரிவாக்கம் காரணமாக ஏரிகள் மறைந்து, அந்த ஏரிகளின் மீது புதிய பேருந்து நிலையம், அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை, அரசு அலுவலகங்கள் உருவாகிவிட்டன என்றாலும், ஒரு மரத்தை வெட்டினால் இரண்டு மரக்கன்று நடுவதைப்போல, அதே உள்ளாட்சியில், தற்போது கும்மிடிப்பூண்டியில் நீர்த்தேக்கம் உருவாக்குவதைப்போல, ஒரு புதிய ஏரியை உருவாக்குவதைக் கட்டாயமாக்குதலும் அவசியம்.

கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மூன்று மாநிலங்களையும் நீதிமன்றங்களையும், மத்திய அரசையும் நம்பிக்கொண்டிருப்பதில் பயனில்லை. நம் மாநிலத்தில் உள்ள ஏரிகளை நம்பி வாழ்வதைத் தவிர வேறு வழியே இல்லை.

ஏனையோர் தருவார் ஏமாற்றம் - எனினும் ஏரிகள் நம்மைக் காப்பாற்றும்.

---

## மல்லிகை, பிச்சிப் பூக்கள் கிலோ ரூ. 1,000

First Published : 29 Jan 2012 01:26:36 AM IST

நாகர்கோவில், ஜன. 28: கன்னியாகுமரி மாவட்டத்தில் மல்லிகை, பிச்சி, சம்பங்கிப் பூக்களின் விலை சனிக்கிழமை கடுமையாக உயர்ந்திருந்தது.

தோவாளை பூச்சந்தையில் மல்லிகை, பிச்சிப் பூக்கள் கிலோ ரூ. 1,000-க்கு விற்கப்பட்டன. ஒரு வாரமாகவே இப்பூக்களின் விலை இதே அளவுக்கு இருக்கிறது. விலை உயர்வுக்கு பனிப்பொழிவு முக்கிய காரணம். பனிப்பொழிவால் மொட்டுகள்


அதிகளவில் உதிர்வதால் சந்தைகளுக்கு பூவரத்து குறைந்துள்ளது. மேலும் திருமண முகூர்த்தங்கள் அதிகம் உள்ளதும் விலை உயர்வுக்கு காரணமாகக் கூறப்படுகிறது.
நாகர்கோவிலில் பூக்கடைகளில் மல்லிகை, பிச்சிப் பூக்கள் முழம் ரூ. 40 வரை விற்கப்பட்டன. கடந்த வாரம் கிலோ ரூ. 150-க்கு விற்கப்பட்ட சம்பங்கிப் பூ சனிக்கிழமை ரூ. 400 ஆக உயர்ந்திருந்தது.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**வைரஸ் நோய் தாக்குதலால் தர்பூசணி உற்பத்தி பாதிப்பு**

ஜனவரி 29,2012,03:33



கிருஷ்ணகிரி : வைரஸ் நோய் தாக்கத்தால் தர்பூசணி உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.கோடை சீசனுக்கு முன்னதாகவே தர்பூசணி பழம் சந்தையில் குவியத் தொடங்கியுள்ளது. கிருஷ்ணகிரி, தர்மபுரி, மேச்சேரி, விழுப்புரம் பகுதிகளில் அதிக பரப்பளவில் தர்பூசணி பழம் பயிராகிறது. மூன்று மாதங்களில் விளையக்கூடிய, நல்ல லாபம் தரக்கூடிய தர்பூசணியை விவசாயிகள் ஆர்வமாக பயிரிடுகின்றனர். கோடை துவங்க ஓரிரு வாரங்களுக்கு முன்னதாகவே தர்பூசணி அறுவடை துவங்கி விடும். செப்டம்பர் மாதம் நடவுசெய்யப்பட்ட பயிர், தற்போது அறுவடைக்கு தயாராகவுள்ளது. நவம்பர், டிசம்பர் மாதங்களில் தமிழகத்தில் பெய்த கடும் மழையால், தர்பூசணி பயிரில் வைரஸ் நோய் தாக்கப்பட்டு, பழத்தின் அளவு குறைந்தது.

ஈரோட்டை சேர்ந்த பழ விற்பனையாளர் முருகேசன் கூறியதாவது: செப்டம்பர் மாதம் பயிரான பழம்தான் தற்போது, அறுவடையாகிறது. சீசனுக்கு முன்கூட்டியே சாகுபடி

துவங்கியதால், மழையால் வைரஸ் நோய் தாக்கி, உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் இறுதியில் அறுவடை செய்யும் பழம்தான் அதிக சுவையும், நல்ல தரமாகவும் இருக்கும். தற்போது வரத்தாகியுள்ள பழங்கள் அளவு குறைவாகவும், சுருங்கியும் காணப்படுகின்றன. விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது. முக்கிய நகர்ப்பகுதியில் தள்ளுவண்டி மூலம் தர்பூசணி பழம் பீஸ் ஒன்றுக்கு, ஐந்து ரூபாய்க்கும், கிலோ, 15 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இவ்வாறு முருகேசன் கூறினார்.

---

**நிலக்கடலைக்கு தட்டுப்பாடு: கடலை எண்ணெய் விலை கிடு... கிடு...**

ஜனவரி 29,2012,03:32



சேலம் : தமிழகத்தில் நிலக்கடலைக்கு நிலவும் தட்டுப்பாடு காரணமாக, கடலை எண்ணெயின் விலையில் லிட்டருக்கு, 10 ரூபாய் வரையில் திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது. ஹோட்டல் தொழிலில் ஈடுபட்டுள்ளோர், பெண்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தமிழகத்தில், சேலம், ஈரோடு, தேனி, திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் டி.எம்.வி-2, டி.எம்.வி-7, ஜெ.எல் - 24 ஆகிய ரக நிலக்கடலை பயிரிடப்படுகிறது. நடப்பாண்டில் நிலக்கடலை விளைச்சல் எதிர்பார்த்த அளவிற்கு இல்லை. மேலும், ஜனவரி முதல் வாரத்தில் அறுவடை துவங்கும் என, எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தற்போது பெய்து வரும் கடும் பனிப் பொழிவால் நிலக்கடலை அறுவடையில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த நிலக்கடலையின் வரத்திலும் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது.

மார்க்கெட்டில், நிலக்கடலைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் விலையில் கடும் உயர்வு ஏற்பட்டுள்ளது. இந்த விலை உயர்வு அப்படியே எண்ணெய் விலையில் எதிரொலித்துள்ளது. அதன் காரணமாக தற்போது கடலை எண்ணெய் விலையில் லிட்டருக்கு, 10 ரூபாயும், டின்னுக்கு, 135 ரூபாய் வரையில் திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் வரையில் லிட்டர் 98 ரூபாய்க்கு விற்ற கடலை எண்ணெய், தற்போது 108 ரூபாய்க்கு விற்கிறது. அது போன்ற, 15 லிட்டர் கொள்ளளவு கொண்ட டின் 1425 ரூபாய்க்கு விற்றது, 1,545 ரூபாய்க்கு விற்கிறது.

ரிபைண்ட் கடலை எண்ணெய், 15 லிட்டர் கொள்ளளவு கொண்ட டின், 1,590 ரூபாய்க்கு விற்றது, 1,740 ரூபாய்க்கு விற்கிறது. சில்லரை விலையில் லிட்டர், 108 ரூபாய்க்கு விற்றது, 118 ரூபாயாக உயர்ந்து உள்ளது. இந்த விலையில் மேலும் உயர்வு ஏற்படும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

---

**மாம்பழ சீசனுக்கான பணிகள் மும்முரம்: எதிர்பார்ப்பில் விவசாயிகள்!!**

ஜனவரி 28,2012,16:03



நத்தம் : மா "சீசன்' துவங்குவதை முன்னிட்டு, நத்தம் பகுதியில் உழவு செய்தல், மருந்து தெளிக்கும் பணிகள் மும்ரமாக நடக்கின்றன. சென்ற ஆண்டை போல விலை குறைந்து இழப்பு ஏற்படாமல், லாபம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில், விவசாயிகள் உள்ளனர்.

நத்தம் பகுதிகளில், 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மா சாகுபடி நடக்கிறது. கல்லாமை, காசாலட்டு, மல்கோவா,செந்தூரா, பங்கனப்பள்ளி, இமாம்பசந், சப்பட்டை, காதர்

மற்றும் தேன்சிட்டு, வாழைப்பூ, கருங்குரங்கு ஆகியவை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. ஜனவரியில் துவங்கி ஜூன் வரை மா "சீசன்' நடைபெறும். ந.புதுப்பட்டி, சிறுகுடி, குடகிப்பட்டி, செங்குறிச்சி, செந்துறை, கோட்டையூர், சமுத்திராப்பட்டி, பரளி, வத்திப்பட்டி, காசம்பட்டி, லிங்கவாடி, பாலப்பநாயக்கன்பட்டி, புன்னப் பட்டி, அய்யாப்பட்டி, மலைப்பட்டி, கணவாய் பட்டி, அஞ்சுகுளிப்பட்டி, மணியகாரன்பட்டி, ஆவிளிப்பட்டி, வி.எஸ்.கோட்டை, கம்பிளியம்பட்டி, ம*ர் பகுதிகளில் மா விளைச்சல் அதிகம்.

ஆர்வம்: விவசாயிகள், இந்த ஆண்டு சீசனுக்கு தயாராகி வருகின்றனர். மாமரங்களுக்கு மருந்து தெளிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். மா மரங்களில் பிஞ்சுகள் காய்க்க துவங்கி, தொடர்ந்து மாசி, பங்குனி வரை காய்கள் பெருக்கமடைந்து, சித்திரை முதல் ஆடி வரை அறுவடை இருக்கும்.

மா, புளி, தென்னை சாகுபடி சங்க தலைவர் கண்ணுமுகமது கூறியதாவது: சென்ற ஆண்டு, அதிக மா சாகுபடியால், விலை மிகவும் குறைந்தது. விவசாயிகள், குத்தகைதாரர்கள் ஏமாற்றம் அடைந்தனர். இந்த ஆண்டு மா சாகுபடி சீராக இருந்து விலையேற்றம் இருக்கும் என, விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். மா விளைச்சலை பொறுத்தே விலை நிர்ணயம் இருக்கும். நஷ்டத்தை தவிர்க்கவேண்டும் என்ற ஆர்வத்துடன் பணிகளை செய்துவருகின்றனர், என்றார்.

---

தினத் தந்தி DAILY THANTHI

***ஏற்றுமதியில் தொடர்ந்து அமோக வளர்ச்சி***

***நறுமணப் பொருள்கள் உற்பத்தியில் உலக அளவில் இந்தியா முதலிடம்***



*இக்கனாமிக் டைம்ஸ் ஆய்வு பிரிவு*
*புதுடெல்லி*
*நறுமணப் பொருள்கள் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் முதலிடத்தில் உள்ளது.*

2000–ஆம் ஆண்டு நிலவரப்படி நம் நாட்டில் ஒட்டுமொத்த அளவில் சுமார் 22.56 லட்சம் டன் நறுமணப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. கடந்த பத்து ஆண்டுகளில் உற்பத்தி மேலும் அமோக வளர்ச்சி கண்டுள்ளதாக தெரிகிறது. இந்நிலையில் இந்தியாவின் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

வனிலா, ஜாதிக்காய்

நறுமணப் பொருள்கள் பட்டியலில் மிளகாய், மிளகு, மஞ்சள், சீரகம், தனியா, வனிலா, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, பட்டை, ஏலம், இஞ்சி உள்ளிட்ட ஏராளமான பொருள்கள் இடம் பெறுகின்றன. இவற்றுள் பல மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்களாகவும் மாற்றப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியாவின் நறுமணப் பொருள்களுக்கு உலகம் முழுவதுமாக நல்ல வரவேற்பு உள்ளது.

அண்மைக் கால ஆய்வறிக்கை ஒன்றில் உலக நாடுகளின் நறுமணப் பொருள்கள் உற்பத்தி, ஏற்றுமதி குறித்து பல்வேறு சுவாரஸ்யமான தகவல்கள் வெளிவந்துள்ளன. அத்துடன் சில குறிப்பிட்ட பொருள்களின் பிறப்பிடம் பற்றிய புள்ளிவிவரங்களும் தரப்பட்டுள்ளன. உலகில் கிராம்பு முதன் முதலாக தோன்றிய நாடு இந்தோனேஷியாவில் உள்ள மோலுக்காஸ் ஆகும். லவங்கத்தின் பிறப்பிடம் இந்தியா மற்றும் இலங்கை என தெரிகிறது. மிளகு முதலில் மேற்கு இந்தியாவில் மலைப்பிரதேசங்களில் தோன்றியுள்ளது. ஜாதிக்காயின் பிறப்பிடம் பாப்புவா நியூ கினியா மற்றும் மோலுக்காஸ் ஆகியவை ஆகும். வனிலாவின் பூர்வீகம் மெக்சிகோ என்று கூறப்படுகிறது.

சர்வதேச அளவில் நறுமணப் பொருள்கள் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் இருந்து வரும் நிலையில் சீனா இரண்டாவது இடத்திலும் (5.85 லட்சம் டன்), இந்தோனேஷியா மூன்றாவது இடத்திலும் (2.61 லட்சம் டன்), பாகிஸ்தான் நான்காவது இடத்திலும் (2.08 லட்சம் டன்), நைஜீரியா ஐந்தாவது இடத்திலும் (1.46 லட்சம் டன்), எத்தியோப்பியா ஆறாவது இடத்திலும் (1.11 லட்சம் டன்), மெக்சிகோ ஏழாவது இடத்திலும் (91,755 டன்) உள்ளன. மற்ற நாடுகள் அனைத்துமாக ஆண்டுக்கு 1.05 லட்சம் டன் நறுமணப் பொருள்களை உற்பத்தி செய்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ஆக, உலகின் மொத்த நறுமணப் பொருள்கள் உற்பத்தி ஏறக்குறைய 49 லட்சத்து 39 ஆயிரத்து 990 டன் என கணக்கிடப்பட்டுள்ளது.

எகிப்தியர்கள்

நறுமணப் பொருள்களின் தோற்றமும், வளர்ச்சியும் குறித்த தகவல்கள் வியக்க வைப்பதாக உள்ளன. கிறிஸ்து பிறப்பதற்கு 3500 ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தியர்கள் உணவு வகைகளுக்கு வாசனையூட்டுவதற்காகவும், அழகு சாதனப் பொருட்கள் தயாரிக்கவும், இறந்தவர்களின் உடலை பாடம் செய்வதற்காகவும் பயன்படுத்தியுள்ளனர். கி.மு.2,000 ஆண்டுக்கு முன்பே பல்வேறு நறுமண மூலிகைகள் உலகில் பயன்படுத்தப்பட்டதாக தெரிகிறது. கிறித்தவர்களின் வேத நூலான பழைய ஏற்பாட்டில் பல மூலிகை செடிகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கி.மு. 1000–த்தில் சீனா, இந்தியா, கொரியா ஆகிய நாடுகளில் மூலிகைகளைப் பயன்படுத்தும் வைத்திய முறைகள் இருந்தன. கி.மு.200 முதல் கி.மு.800 வரையிலான காலத்தில் ரோமானியர்கள் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியில் தலைசிறந்து விளங்கினர்.

ஏகபோக ஆதிக்கம்

கி.பி. 700 முதல் 1,500–ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியில் வெனிஸ் குடியரசு ஏகபோக ஆதிக்கம் செலுத்தியது. கி.பி.1492–ல் நறுமணப் பொருள்களின் தாயகமான இந்தியாவைத் தேடிப் புறப்பட்ட கொலம்பஸ், இந்தியா என்றெண்ணி முற்றிலும் புதிய பூமியான அமெரிக்காவில் கால் பதித்தார். கி.பி. 1600–1900 ஆண்டுகளுக்கிடையில் அமெரிக்கர்கள் நறுமணப் பொருள்கள் வர்த்தகத்தில் களம் இறங்கினர். 1500–1800 ஆண்டுக் காலத்தில் ஆங்கிலேயர்களும் இதில் ஈடுபட்டனர். 15–ஆம் நூற்றாண்டிலிருந்து 17–ஆம் நூற்றாண்டு வரையில் உலக நாடுகள் பலவும் நறுமணப் பொருள்கள் வர்த்தகத்தில் கடும் போட்டியில் ஈடுபட்டன.

150 கோடி டாலர்

உலக அளவில் இன்று ஏறக்குறைய 4 லட்சம் டன் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி

*செய்யப்படுகின்றன. 2011–ஆம் ஆண்டில் 150 கோடி டாலருக்கு (சுமார் ரூ.7,500 கோடி) நறுமணப் பொருட்கள் ஏற்றுமதியாகி உள்ளன. இதில், மதிப்பின் அடிப்படையில் மிளகு ஏற்றுமதி 33 சதவீதமாகவும் உள்ளது. குடமிளகாய் ஏற்றுமதி 22 சதவீதமாகவும், வெந்தயம் ஏற்றுமதி 15 சதவீதமாகவும் உள்ளது. பட்டை, மஞ்சள் மற்றும் இஞ்சி ஏற்றுமதி முறையே 14 சதவீதம், 8 சதவீதம் மற்றும் 6 சதவீதமாக உள்ளது. ஏலக்காய் ஏற்றுமதி 4 சதவீதமாகவும், வனிலா ஏற்றுமதி 2 சதவீதமாகவும் இருந்து வருகிறது.*

*இன்றும் நறுமணப் பொருள்கள் உற்பத்தியில் பெரும்பாலும் இயந்திர சாதனங்கள் பயன்படுத்தப்படுவதில்லை. மனித உழைப்பில்தான் சாகுபடி செய்யப்படுகிறது. பின்னர் கழுவி சுத்திகரிக்கப்பட்டு 5 முதல் 10 நாட்கள் வரை வெயிலில் உலர்த்தி, பின்னர் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படுகின்றன. உலகிலேயே அதிக காரமுள்ள மிளகாய் ஆஸ்திரேலியாவில்தான் பயிராகிறது. அங்கு ஆண்டுக்கு 14.64 லட்சம் டன் மிளகாய் உற்பத்தி செய்யப்படுகிறது.*

*தனி செல்வாக்கு*

*உலகம் முழுவதுமாக நறுமணப் பொருள்களில் தனி செல்வாக்கு பெற்றுள்ளது மிளகுதான் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனென்றால் இது உணவு வகைகளில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. மேலும் மருத்துவ குணங்கள் உள்ளதாக நம்பப்படுகிறது. நறுமணப் பொருள்களில் வர்த்தகப் பயிர்களில் ஒன்றாக உள்ள மிளகு, உலக ஏற்றுமதியில் அளவின் அடிப்படையில் 60 சதவீத பங்கினைப் பெற்றுள்ளது.*

---

தினகரன்

## பனிப்பொழிவால் பூக்கள் விளைச்சல் பாதிப்பு : மல்லிப்பூ கிலோ ரூ.1500 ஆனது



நாகர்கோவில்: கடுமையான பனிப்பொழிவால் குமரியில் பூக்கள் உற்பத்தி கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளது. வரத்து குறைவால் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது.

மல்லிகை பூ கிலோ ரூ.1500 ஆக உயர்ந்துள்ளது. குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பனிப்பொழிவு அதிகரித்துள்ளது. மாலை 5 மணி முதல் மறுநாள் காலை 8 மணி வரை விடிய விடிய பனிப்பொழிவு காணப்படுகிறது. மாவட்டத்தில் நேற்று அதிகபட்ச வெப்பநிலை 34 டிகிரி செல்சியசும், குறைந்தபட்சம் 22 டிகிரி செல்சியசும் இருந்தது. கடும் பனிப்பொழிவால் கீரை, கத்தரி உள்ளிட்ட காய்கறி பயிர்கள் பாதிப்படைந்துள்ளன. கத்தரி தோட்டங்களில் பிஞ்சு உற்பத்தி குறைந்துள்ளது. தோவாளை, ஆரல்வாய்மொழி, செண்பகராமன்புதூர், மாதவலாயம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பூந்தோட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. உற்பத்தி கணிசமாக குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதனால் பிச்சி, மல்லிகை உள்ளிட்ட பூக்கள் விலை வழக்கத்தைவிட அதிகரித்துள்ளது.

நேற்று காலை நிலவரப்படி தோவாளை மார்க்கெட்டில் மல்லிகை பூ கிலோ ஸீ1500 வரை விற்பனை செய்யப்பட்டது. பிச்சி பூ கிலோ ரூ.1000க்கு விற்பனையானது. அரளி ரூ.200, ஆரஞ்சு கேந்தி ரூ.40, மஞ்சள் கேந்தி ஸீ60க்கும் விற்பனையானது. கோழிக்கொண்டை ஸீ40க்கு விற்பனை செய்யப்பட்டது. ரோஜா பாக்கெட் ரூ.50 வரை விற்பனையானது. கொழுந்து கிலோ ரூ.120 ஆக இருந்தது. மல்லிகை பூக்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் வெளிநாடுகளுக்கும் பூக்கள் ஏற்றுமதி செய்யப்படுவது குறைந்துள்ளது.

இது தொடர்பாக பூ வியாபாரி ராஜேந்திரன் என்பவர் கூறியதாவது: பனிப்பொழிவு காரணமாக தோவாளை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பூக்கள் உற்பத்தி குறைந்துள்ளது. திருமண சீசன் என்பதால் பூக்கள் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. வழக்கமாக கிலோ ரூ.300க்கு விற்பனையான மல்லிகை பூ ரூ.1500 ஆக உயர்ந்துள்ளது. பிச்சிப்பூ கிலோ ரூ.1000க்கு விற்பனை செய்யப்படுகிறது. பிப்ரவரியில் பனிப்பொழிவு குறைய துவங்கும். அதன் பின்னர் பூ உற்பத்தி மீண்டும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

---

**குன்னூர் ஏல மையத்தில் டீத்தூள் விலை உயர்வு விற்பனையும் விறுவிறு**



குன்னூர்: நீலகிரி மாவட்டம், குன்னூர் தனியார் ஏல மையத்தில் தேயிலை தூள் ஏலம் நடைபெற்றது. இலை ரகம் 7.36 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 2.86 கிலோ என மொத்தம் 10.22 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. பாகிஸ்தான், ரஷ்யா நாட்டு வர்த்தகர்கள் மற்றும் உள்நாட்டு வர்த்தகர்கள் அதிக அளவில் பங்கேற்றனர். இதனால், அனைத்து ரக தூளுக்கும் கிலோவுக்கு ரூ.2 வரை விலை உயர்ந்தது. 86% தேயிலைத்தூள் விற்பனையானது.

இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ.48 முதல் ரூ.54, உயர்வகை ரூ.85 முதல் ரூ.142, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.52 முதல் ரூ.55, உயர் வகை ரூ.85 முதல் ரூ.141 வரை விலை கிடைத்தது. சி.டி.சி. டஸ்ட் ரகத்துக்கு அதிகபட்சமாக கிலோ ரூ.148ம், ஆர்த்தோடக்ஸ் ரகத்துக்கு ரூ.215ம் விலை கிடைத்தது. அடுத்த ஏலத்திற்கு 10.15 லட்சம் கிலோ தேயிலைத்தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.